பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 04 | செவ்வாய்க்கிழமை | 21.10.2025 | அதிர்வு 082

## செவ்வந்தியின் வாழ்க்கை திடீரென மாறியது எவ்வாறு?

### மாமா கூறும் அதிர்ச்சித் தகவல்

கணேமுல்ல சஞ்சீவ சுட்டு கொல்லப்படு வதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் இஷாரா செவ்வந்தி வெளிநாட்டுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டில் இருந்து 06

# கிளிநொச்சியில் செவ்வந்தி மறைந்திருக்க இடம் வழங்கிய அரச உத்தியோகத்தர் கைது!



(ந.லோகதயாளன்)

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கணேமுல்லசஞ்சீவபடுகொலையின்சூத்திர தாரி இஷாரா செவ்வந்தியை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கிளி நொச்சியில் ஒருவர் கொழும்பில் இருந்து வந்த குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற சமயம் அதற்கு முன்பு சில நாள்கள் மறைந் திருக்க இடம் வழங்கிய குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, அம்பாள்குளத்தைச் சேர்ந்த ஓர் அரச உத்தியோகத்தரே இவ் வாறுகைதுசெய்யப்பட்டுள்ளார்என்றுதெரிய வந்துள்ளது.

அவர் மேலதிக விசாரணைக்காக கொழும் புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.



# செவ்வந்தியுடன் தொடர்புடைய அனைவரும் சிறை செல்வார்கள்

## நீதி அமைச்சர் ஹர்சன திட்டவட்டம்

**“இஷாரா செவ்வந்தி உட்பட வெளி நாடுகளில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்படுவார்கள்.”**

**- இவ்வாறு நீதி அமைச்சர் சட்டத் தரணி ஹர்சன நாணயக்கார தெரி வித்தார்.** 06




நாட்டிலுள்ள கலால் துறை (அல்லது மதுவரித் துறை) அதிகாரிகள் காலால் ஆணையாளர் நாயகம் எம்.பி.என்.ஏ.பெமாரத்னவுக்கு எதிராக நெருப்பு எடுத்திருக்கிறார்கள்.

காரணம் ஒன்றுமில்லை. அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்று கலால் அதிகாரிகளை சுட்டு விட்டதாம். அதில் அவர்கள் சீற்றத்தில் மூழ்கி யுள்ளனராம்.

‘கலால் துறையில் 20 முதல் 30 வீத அதி காரிகள் ஊழல்வாதிகள்’ என்று அவர்களின் ஆணையாளர் நாயகம் தமது பகிரங்க அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டமைக்கு எதிராகத்தான் இந்தச் சீற்றம்.

கலால் துறை அதன் வருவாய் இலக்கை தாண்டி 107 வீத வருவாயை ஈட்டி கொடுத்திருக் கையில் இவ்வாறு எப்படி சகட்டு மேனிக்குக் குற்றம் சாட்ட முடியும் என்று கலால் அதிகாரிகள் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள்.

இதற்காக, இன்றைய தினம் தங்களின் காலால் ஆணையாளர் நாயகத்தை நேரில் 06

# நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் இராணுவக் குழுக்களை அனுப்ப தீர்மானம்

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்த நிலைகளைக் கருத்திற்கொண்டு அனைத்து மாவட்டங்களுக்கும் இராணுவக் குழுக்களை அனுப்பிவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் எம்.ஜே.ஆர்.எஸ்.மெதகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாகப் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சியம்பலாண்டுவ – கொங்கஸ்பிட்டிய வீதியின் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதால் அதனூடான போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் வாகன சாரதிகள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



# சீரற்ற வானிலையால் 585 பேர் பாதிப்பு

நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக 144 குடும்பங்களைச் சேர்ந்த 585 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனை அறிவித்துள்ளது.

இதற்கமைய குருநாகல் மாவட்டத்தில் 111 குடும்பங்களைச் சேர்ந்த 473 பேரும், அநுராதபுர மாவட்டத்தில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேரும், காலி மாவட்டத்தில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

# விசேட சுற்றிவளைப்பில் 4 ஆயிரத்து 631 பேர் கைது!

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 631 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 12 பேரும், சந்தேகத்தின் பேரில் 648 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 230 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 142 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 27 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 15 சாரதிகளும்,



ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 557 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பணியிடை நீக்கம் செய்யப்பட்ட கான்ஸ்டபிளுக்கு விளக்கமறியல்



கொழும்பு – புதுக்கடை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட, பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் கசுன் தயாரத்ன உத்தரவிட்டுள்ளார்.

மருதானை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய போது நபர் ஒருவரின் கையடக்கத் தொலைபேசியைப் பலாத்காரமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட 26 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் புதுக்கடை பிரதேசத்தில் 11 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன்வாழைத்தோட்டம்பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இவர் நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருள் கலந்த நீரை குடித்த இரு நாய்கள் பரிதாபச் சாவு!



அம்பாந்தோட்டை, தங்காலை துறைமுகத்தில் இருந்த ஐஸ் போதைப்பொருள் கலந்த நீரைக் குடித்த ஐந்து நாய்களில் இரண்டு நாய்கள் உயிரிழந்துள்ளனர் என்று தங்காலை கால்நடை வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்காலை துறைமுகத்தில் கடந்த 14ஆம் திகதி கடலில் மிதந்த 51 பொதிகளில் இருந்து போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

பொதிகள் கைப்பற்றப்பட்ட பகுதியில் இருந்த நீரை குடித்த ஐந்து நாய்கள் சுயநினைவின்றி ஒரே இடத்தில் சுற்றித் திரிந்த நிலையில் தங்காலை கால்நடை வைத்தியசாலையின் வைத்தியர்கள் அவற்றுக்குச் சிகிச்சை அளித்து வந்தனர்.

எவ்வாறிருப்பினும் அவற்றில் இரண்டு நாய்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பரிதாபமாக உயிரிழந்துள்ளன.

ஏனைய நாய்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது என்று தங்காலை கால்நடை வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# கைவிலங்குடன் தப்பிச் சென்ற சந்தேகநபர் வசமாக மாட்டினார்

## அவருக்கு உதவி செய்த குற்றச்சாட்டில் நண்பனும் கைது



கைவிலங்குடன் பொலிஸாரிடமிருந்து தப்பிச் சென்ற சந்தேகநபர் ஒருவர் வத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் குற்றம் தொடர்பில் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் வத்தேகம பொலிஸாரால் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அவர் கைவிலங்குடன் பொலிஸாரிடம் இருந்து தப்பிச் சென்று தலைமறைவாக இருந்தார்.

வத்தேகம பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு நாள் சோதனை நடவடிக்கையில் தப்பிச் சென்ற சந்தேகநபர் கண்டி பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபர் தனது கைகளில் இருந்த கைவிலங்கைத் தனது நண்பனின் உதவியுடன் நீக்கியுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபருக்கு உதவி செய்த குற்றச்சாட்டில் அவரது நண்பனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



# மித்தெனியவில் இருந்தபோது உடனடியாக கொழும்புக்கு அழைக்கப்பட்ட செவ்வந்தி!

## வாக்குமூலத்தில் அவர் தெரிவிப்பு

நேபாளத்தில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தியிடமிருந்து மேலும் பல தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

“பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவவைப் படுகொலை செய்வதற்கு முன்னைய நாள் அதாவது பெப்ரவரி 18 ஆம் திகதி அன்று நானும் கமாண்டோ சலிந்துவும் மித்தெனிய பிரதேசத்தில் தங்கியிருந்தோம். இதன்போது கெஹெல்பத்தர பத்மே என்பவர் எங்களை உடனடியாகக் கொழும்புக்குச் செல்லுமாறு கூறினார். பின்னர் நானும் கமாண்டோ சலிந்துவும் கொழும்புக்குச் சென்றோம். இதனையடுத்து நான் சட்டத்தரணி வேடத்தில், புதுக்கடை நீதிமன்றத்துக்குள் சென்று கணேமுல்ல சஞ்சீவ என்பவரைக் கொலை செய்ய உதவி செய்தேன்.” - என்று இஷாரா செவ்வந்தி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இஷாரா செவ்வந்தியும் கமாண்டோ சலிந்துவும் அருண விதானகமகே ஹேவத் கஞ்சா என்பரைக் கொலை செய்வதற்காக மித்தெனியவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் பின்னர் திட்டம் மாற்றப்பட்டு கணேமுல்ல சஞ்சீவவைக் கொலை செய்வதற்காக இருவரும் கொழும்புக்கு அழைக்கப்பட்டனர் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி பாதாள உலக கும்பலைச் சேர்ந்த “கணேமுல்ல சஞ்சீவ” என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விமான நிலையத்தில் விநியோகிக்கப்படும் சாரதி உரிமத்துக்கான கட்டணம் அதிகரிப்பு




கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விநியோகிக்கப்படும் சாரதி உரிமத்திற்கான கட்டணத்தை 2 ஆயிரம் ரூபாயில் இருந்து 15 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அடுத்த வாரம் மீண்டும் வெளியிடப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த வசதி எதிர்காலத்தில் வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பல ஆண்டுகளுக்குப் பின்னர் நாடு திரும்பும் இலங்கையர்களும் பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம் ஓட்டுநர் உரிமத்தை பெற்றுக்கொள்ள முடியுமென வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



# மேலும் நான்கு ரயில் சேவைகள் மண்சரிவு அனர்த்தத்தால் இரத்து!

தொடரும் மோசமான காலநிலை காரணமாக ரயில் போக்குவரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் இன்னும் நீடித்து வருகின்றன.

இஹல கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட மண்சரிவு மற்றும் ரயில் தடம்புரண்ட சம்பவத்தின் விளைவாக நேற்று திங்கட்கிழமை பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இதனிடையே, பலான மற்றும் இஹல கோட்டை ரயில் நிலையங்களுக்கு இடையில் இரண்டு இடங்களில் புதிய மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக, ரயில் பாதை சீரமைப்புப் பணிகள் இன்னும் நடைபெற்று வருவதால், இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவிருந்த மேலும் நான்கு ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட ரயில் சேவைகள் பின்வருமாறு:-

- அதிகாலை 04.30 – கண்டி முதல் கொழும்பு கோட்டை
- அதிகாலை 04.50 – மாத்தளை முதல் கொழும்பு கோட்டை
- அதிகாலை 05.00 – கண்டி முதல் மாத்தறை
- காலை 06.15 – கண்டி முதல் கொழும்பு கோட்டை

ரயில் பாதை சீரமைப்புப் பணிகள் விரைவில் முடிவடையும் நிலையில், பிற சேவைகள் வழமைக்கும் திரும்பும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# குற்றச் செயல்களூடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவு நேற்று ஆரம்பம்




பி.சி.ஐ.டி.எனப்படும்குற்றச்செயல்களினூடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது பொலிஸ் திணைக்களத்தின் கீழ் ஒரு பிரிவாகச் செயற்படுகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன மற்றும் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோரின் தலைமையில் புதிய பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

குற்றச் செயல்களினூடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான சட்டமூலம் கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி சபாநாயகர் அதில் கையொப்பமிட்டதுடன், அது தொடர்பான விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சட்டம் தற்போது அமுலுக்கு வந்துள்ளது.

இந்த சட்டம் குற்றச் செயல்கள் மூலம் பெறப்பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்வதில் உள்ள தடைகளைத் தளர்த்தியுள்ளதுடன் விசாரணை அதிகாரங்களை விரிவுபடுத்தியது.

குற்றச் செயல்கள் மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்களை விசாரித்தல், தடை செய்தல், பறிமுதல் செய்தல் மற்றும் நீக்குவதற்கான முறையான செயன்முறையை இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தித்து, அந்த அறிக்கையை அவர் திரும்பப் பெற வேண்டும் என்று அவரை வலியுறுத்துவது என கலால் அதிகாரிகள் தொழிற்சங்கத்தின் நிர்வாகக் குழு முடிவு செய்திருக்கிறது. அப்படி அறிக்கையை வாபஸ் பெறாவிட்டால் பொருத்தமான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடு வோம் என்றும் கலால் அதிகாரிகள் அறிவித்து இருக்கிறார்கள்.

கலால் துறையும், அதன் அதிகாரி களும் எவ்வளவு சீத்துவமிக்கவர்கள் என்பது நாட்டு மக்களுக்கு பொதுவா கவே தெரியும்.

நாட்டில் போக்குவரத்துப் பொலிஸார், கலால் துறை அதிகாரிகள் எல்லாம் எவ்வளவு மேன்மை மிக்கவர்கள் என் பதை மக்கள் அனுபவரீதியாக கண்டு உணர்ந்து இருக்கிறார்கள்.

கலால் அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கை என்று மிரட்டுவதால் வேறு வழியின்றி கலால் துறை ஆணையாளர் நாயகம் தான் கூறிய கூற்றை வாபஸ் பெற வேண்டியதுதான்.

'கலால் துறையின் 20 முதல் 30 வீத அதிகாரிகள் ஊழல்வாதிகள்' என்ற தமது கூற்றை அவர் வாபஸ் வாங்கி 'கலால் துறையின் 20 முதல் 30 வீத அதிகாரி கள் உத்தமர்கள்' என்று அறிவித்தால் போயிற்று....!

*   *   *

'பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாக' என்பார்கள். இது போன்ற நிலைமை இலங்கைக்கு ஏற் படக்கூடிய சூழல் இருப்பது பற்றி இப் போது பேசப்படுகின்றது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடி யால் துவண்டு, நிமிர முடியாமல் போரா டிக் கொண்டிருக்கும் இலங்கைக்கு இது போதாத காலம் போலும்.

அடுத்து மிக மோசமான காலநிலைப் பாதிப்பை இலங்கை எதிர்கொள்ள இருப்பதாக வளிமண்டலவியல் நிபுணர் கள் கூறுகின்றனர்.

அடுத்தஇரண்டுஅல்லதுமூன்றுமாதங் களுக்கு பெருமளவில் தொடர் மழை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறைந்தது ஆறு தாழமுக்கங்களை இலங்கை பிரதேசம் அடுத்த பெப்ரவரி வரையில் எதிர்கொள்ளக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அண்மைக் காலம் வரை வரட்சியை எதிர்கொண்ட நாடு இப்போது பெரும ழையை எதிர்கொண்டு வருகின்றது.

ஏற்கனவே எலுமிச்சம்பழம் விலை கிலோ 3,000 ரூபாவைத் தாண்டி விட்டது. மழை வெள்ள நிலைமை மோசமடைந்த பின்னர் மரக்கறிகளின் விலை எக்கச் சக்கமாக எகிறும் ஆபத்து உள்ளது.

இப்போது பெய்கின்ற மழை விட்டுத் தராவிட்டால் இம்முறை வேளாண்மையும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டு அரிசி இறக்குமதி மீண்டும் நெருக்கடியைத் தரும் விவகாரமாக மாறும்.

ஏற்கனவே வறட்சியால் தென்னைச் செய்கை மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின் றது. காலம் பிந்திய மழை உடனடி விளைச் சலுக்கு உதவப்போவதில்லை. அத னால் தேங்காய் தட்டுப்பாடும் அடுத்து வரும் வாரங்களில் ஏற்படும் சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்படப் போகும் காலை நிலை மாற்றம் தன் பங்குக்கு நாட்டுக்கு பெரும் நெருக்கடி கொடுத்துவிட்டுப் போகும் என்றுதான் கருதப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீளுவது என்பது சிக்கலாகத்தான் இருக்கப் போகின்றது.

# இளம் குடும்பஸ்தர் வெட்டிக் கொலை!

## கிளிநொச்சியில் பயங்கரம்




கிளிநொச்சி, அக்கராயான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்கந்தபுரம் – ஈச்சங்குளம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

முற்பகை காரணமாக 24 வயது மதிக்கத்தக்க அதே பகுதியைச் சேர்ந்த கௌரிராஜன் கஜன் என்ற ஒரு பிள் ளையின் தந்தையே நேற்றுமுன்தினம் இரவு இவ்வாறு படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளி நொச்சி நீதிமன்ற நீதிவானின் உத்தர வுக்கு அமைவாக சடலம் பிரேத பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பாக அக்கராயன் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## செவ்வந்தியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்றார் என்று இஷாரா செவ்வந்தியின் மாமா தெரிவித்துள்ளார்.

ருமேனியா நாட்டுக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டு இஷாரா செவ்வந்தி சென்றாரா என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"இஷாரா செவ்வந்தி எனது இரண்டா வது சகோதரியின் மகள். அவருடைய தாய்க்கு மற்றுமொரு நபருடன் தொடர்பு இருந்தது. அவருடன் 2024ஆம் ஆண்டு போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர் பில் இஷாரா செவ்வந்தியும் கைது செய் யப்பட்டார். பின்னர் அவரும் விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர்தான் இஷாரா செவ்வந்தியின் வாழ்க்கை மாற்றமடைந்தது.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் அதிகமாக வீட்டில் தங்குவ தில்லை. நண்பர்கள் மற்றும் அயல வர்களுடைய வீட்டுக்குச் செல்வதை வழக் கமாகக் கொண்டிருந்தார். ஆனால் அவ ருடைய சகோதரரும் சித்தப்பாவும் தொடர்ந் தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந் தனர்.

அவர்களைப் பார்க்கச் செல்வதாக கூறி செவ்வந்தி தொடர்ந்தும் வீட்டில் இருந்து செல்வார். அந்தச் சந்தர்ப்பத் தில் அவரிடம் அதிக பணம் இருந்தது. ஆனால், அந்தப் பணம் எவ்வாறு அவ ருக்குக் கிடைத்தது என்பது தொடர்பில் எங்களுக்கு எதுவும் தெரியாது. அதைப் பற்றி அவர் கூறுவதும் இல்லை.

இதேவேளை விளக்கமறியலில் இருந்த போது கெஹல்பத்தரபத்மேவை சந்தித்துள்ளதாக இஷாரா கூறியிருக் கிறார். பத்மே என்பவர் தொடர்பில் எங் களுக்கு எதுவும் தெரியாது. ஆனால், பத்மே தொடர்பில் இஷாரா அடிக்கடி பேசிய துண்டு. அவரது வீட்டுக்கும் சென்றுள்ளார். அவருடைய குடும்பத்தினருடன் நெருங் கிப் பழகியும் உள்ளார்.

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி வெளிநாட்டுக்குச் செல்வதாக வீட்டார் மற்றும் உறவினர்கள் அனைவரிட மும் தெரிவித்து விட்டு அவர் வீட்டில் இருந்து புறப்பட்டார். மஞ்சள் நிற சிறிய பஸ் ஒன்றில் அவரை ஏற்றிச் சென்றனர். அதற்குப் பின்னர் அவருடனான எங்களது தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

செவ்வந்தி வீட்டில் இருந்து சென்று பல நாட்களுக்குப் பின்னர்தான் ருமேனி யாவில் தங்கியிருப்பதாகவும், தனக்கு இன்னும் தொழில் எதுவும் கிடைக்க வில்லை எனவும் கூறினார்.

எனினும், கணேமுல்லசஞ்சீவகொலை தொடர்பான செய்தி தொலைக்காட்சி யில் ஒளிபரப்பப்பட்டவுடன் உடனடியாக நான் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். வெளிநாட்டுக்குச் செல்வ தாகக் கூறி அவர் இவ்வாறான தொழில் ஈடுபட்டிருப்பதை நான் அறிந்துக் கொண் டேன். அன்றைய தினமே மினுவாங் கொடை பொலிஸார் எங்களது வீட்டுக்கு வந்தனர். அதன்போது எனது சகோதரி யையும், செவ்வந்தியின் சகோதரரையும் வாக்குமூலம் வழங்க அழைத்துச் சென்ற னர்.

செவ்வந்தி சிறுவயது முதல் எவ்வித மாக வேலைகளையும் செய்வதில்லை. அவள் மிகவும் மென்மையானவள். நாய்க் குட்டி வளர்த்தல், பூந்தோட்டம் அமைத் தல் எனச் சிறிய வேலைகளை மட்டுமே அவர் செய்து வந்ததார்." – என்றார்.

## செவ்வந்தியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை ளினால் இஷாரா செவ்வந்தி குழுவினர் மற்றும் கெஹல்பத்தர பத்மே குழுவினர் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள னர்.

இந்தப் பாதாள உலகக் குழுவினரு டன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார் கள். இவர்கள் எவரும் தப்ப முடியாது.

சந்தேகநபர்கள் எங்கு மறைந்து இருந் தாலும் கைது செய்யப்படுவார்கள். நீதிமன் றத்தால் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் நபர்கள் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும். எவருக்கும் மன்னிப்பு கிடையாது.

போதைப்பொருள் வியாபாரிகளிடம் இருந்தும், பாதாள உலகக் குழுவினரி டம் இருந்தும் இந்த நாட்டை மீட்டெடுக்க எமது அரசு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது." – என்றார்.







# பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்துக்கும் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இடையில் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்துக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடந்த காலத்தில் பல்வேறு காரணங்களினால் பல்கலைக்கழக பட்டப்படிப்பு பாடநெறிகளில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் அவற்றை குறித்த காலத்தில் நிறைவு செய்ய முடியாமை காரணமாக பல்கலைக்கழகக் கட்டமைப்பில் உருவாகியுள்ள சிக்கல்கள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் தொடர்பிலும் இங்கு பல்கலைக்கழகஆசிரியர்சங்கசம்மேளனத்தின்பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினர்.

அவ்வாறு தாமதமான பட்டப்படிப்புகளின் தரத்தைப் பாதுகாத்து, அவற்றை விரைவில் நிறைவுசெய்யவும் இதுவரை முடிக்கப்படாத பணிகளை திறம்பட முடிக்கவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான திட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி இங்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்திற்கு தெரிவித்ததுடன், அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பணிக்குழாமினர் ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தொடர்ந்து அவர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், பிரதமர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அனுர கருணாதிலக, தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோருடன் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் பீ.ஆர். வீரதுங்க, செயலாளர் சாருதத்த இளங்கசிங்க உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினரும் கலந்து கொண்டனர்.





நமது கருத்து

# ரணிலே சூத்திரதாரி

“எதிர்காலத்தில் கட்சி அரசியல் தோல்வியடைந்து தனிநபர்களை சுற்றியே அரசியல் தீர்மானிக்கப் படும் நிலைமை வந்து கொண்டிருக் கின்றது.

“நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் மிக முக்கியம். ஆனால் இன்று எதிர்க் கட்சிகள் பலவீனமாகவே உள்ளன.”

- இவ்வாறு அங்கலாய்த்திருக் கின்றார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால அரசியல் போக்குக் குறித்த கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார். அவர் கூறுகின்ற விடயம் உண்மை என்றாலும், அதில் இரண்டு அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

ஒன்று - இது புதிய விடயம் அல்ல. காலங்காலமாக - கடந்த 50 வருடங்களாக - இலங்கை அரசி யலில் நீடிக்கும் நிலைமைதான்.

அடுத்தது - இந்த நிலைமைக்கு காரணம் யார் என்பது. அதுவும் இப்போது இந்த நிலைமைக்கு காரணம் யார் என்பது.

1977 இல் இருந்து ஜே. ஆர். ஜெய வர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, ஏன் அவருக்குப் பின்னர் ஒரே ஒரு தேர்தலை மட்டும் எதிர் கொண்ட கோட்டாபய ராஜபக்ஷ வரை அந்தந்தக் காலகட்டத்தின் தலைவர்களை - தனி நபர்களை - சுற்றித்தான் அரசியல் தீர்மானிக்கப் பட்டது. அதற்கான காரணம் சிந்திக்கப்பட வேண்டும்.

அரசியலில் நிறைவேற்றதிகாரம் என்ற முக்கியமான விடயத்தை தனி ஒரு மனிதரிடம் உரித்தாகக் கைய ளிக்கும் தற்போதைய ஆட்சி முறையை ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்து 1978 இல் கொண்டு வந்ததன் பெறுபேறுதான் இந்த தனி மனித அரசியல் ஆதிக்க நிலைமைக்கு முக்கிய காரணம்.

அதேசமயம் இப்போதும் கூட, தனி மனித ஆளுமையாக ஜனாதி பதி பதவியில் இருக்கும் அநுரகுமார திஸநாயக்க வலிமையாக நிலை கொண்டிருப்பதற்கும், ரணில் விக் கிரமசிங்க குறிப்பிடுகின்றமை போல எதிர்க்கட்சிகள் பலவீனமுற்று இருக்கின்றமைக்கும் அவரேதான் பிரதான காரணம்.

எதிரணிகளைப் பிளந்து, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை நலிவுற வைத்து, ஆளும் தேசிய மக்கள் சக்தியை வலிமைப் படுத்திய வகையில், எதிரணியை பொறுத்தவரை அவற்றுக்கிடையே தற்குறி அரசியல்வாதியாக நடந்து கொண்டவர் அவர்தான். இப் போதும் கூட, எதிர்க்கட்சிகளின் ஐக்கியத்திற்கு ஆப்படிப்பதற்கு ஒவ்வொரு விதமான விளக்கங்கள், வியாக்கியானங்கள் கூறிக் கொண் டிருக்கிறார் அவர்.

மத்திய அரசில் நிறைவேற்றதி காரமும் நாடாளுமன்ற அதிகாரமும் ஒரே தரப்பிடம் இருந்தாலும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி சபைகளையாவது தமது கைகளில் வைத்துக்கொண்டு எதி ரணிகள் ஓரளவுக்கு ஸ்திரம் பெற முடியும். ஆனால் மாகாண சபைகள் இன்று இயங்க முடியாத நிலை மைக்கு வருவதற்கு முழுமையான சூத்திரதாரி இந்த ரணில் விக்கிரம சிங்கதான்.

இரண்டரை வருடங்கள் ஜனாதி பதியாக நீடிப்பதற்கு கிடைத்த அந்த வாய்ப்பின் கடைசி அந்தத்தில் கூட, மாகாண சபைத் தேர்தல்களை நடத் துவதற்கான சட்டத்தை நிறை வேற்றுவதற்கு கிடைத்த சந்தர்ப் பத்தை சுயநல அரசியலுக்காக நாசமாக்கிய மூன்றாம் தர அரசிய லைச் செய்தவர் அவர்தான்.

இப்போது வந்து எதிரணிகள் நலிவுற்றிருக்கின்றன என்று அவர் நீலிக் கண்ணீர் வடிப்பதில் அர்த்த மில்லை. அந்த நிலைமைக்கு முழு பொறுப்பாளி அவர்தான்...!



# தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 26 இலட்சம் விளக்குகள் ஏற்றி சாதனை

தீபாவளி பண்டிகையையொட்டி அயோத்தியின் சரயு நதிக்கரையில் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான தீபங்கள் ஏற்றி வழிபாடு நடத்துவது வழக்கமாகும்.

இந்த நிலையில், உத்தரப் பிரதேசத்தின் அயோத்தி நகரில் சுற்றுலாத்துறை, மாநில அரசு மற்றும் அயோத்தி மாவட்ட நிர்வாகம் ஆகியவை இணைந்து மகா தீபத்திருவிழாவை நடத்தியது.

இதன்போது சரயு ஆற்றின் கரையில் 26 லட்சத்து 17 ஆயிரத்து 215 அகல் விளக்குகள் ஏற்றி உலக சாதனை படைக்கப்பட்டது. அதிகளவான மக்கள் கலந்து கொண்டு தீபங்களை ஏற்றினர்.

உத்தரப் பிரதேசத்தின் முதல் அமைச்சர் யோகி ஆதித்யநாத், 26 லட்சத்திற்கும் அதிகமான விளக்குகளை ஏற்றியமைக்கு கின்னஸ் உலக சாதனைக்கான சான்றிதழ் பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பட்டாசு வெடிவிபத்தில் 89 பேருக்கு படுகாயம்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



தமிழகத்தில் தீபாவளி பண்டிகைக்காக பட்டாசு வெடித்ததில் 89 பேர் காயமடைந்துள்ளனர் என மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

"மருத்துவம்மற்றும்மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தீபாவளி பண்டிகை பட்டாசு விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மருத்துவ பயனாளிகளை நேரில் சந்தித்து நலம் விசாரித்து, தீ விபத்து சிகிச்சை விடுதிகளில் பணிபுரியும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன்,

"தி.மு.க. அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலோடு, ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி அன்று கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வருகை புரிந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்களுடன் கலந்துரையாடி, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் சொல்லி, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்து செல்வது என்பது தொடர் வாடிக்கையாக இருந்து வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வருகை புரிந்து இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்து இருக்கிறோம். தமிழக முதல்வர் ஒவ்வொரு தீபாவளி முன்பாகவும் பாதுகாப்பற்ற முறைகளில் பட்டாசு வெடிப்பதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வும், எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் அரசின் பல்வேறு துறைகளின் எடுத்துரைக்க வேண்டும் என்றும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

நேற்று முதல் தீபாவளி பண்டிகை கொண்டாட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் தொடங்கி பட்டாசு வெடித்ததினால் தமிழ்நாடு முழுவதும் சிகிச்சைக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 89 பேர், இதில் 41 பேர் சிகிச்சை பெற்று நலமுடன் வீடு திரும்பி இருக்கிறார்கள். 48 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள்"என்று தெரிவித்துள்ளார்.

# அடுத்த சிம்பொனி எழுத இருக்கிறேன்

## இளையராஜா அறிவிப்பு



புதிய சிம்பொனி ஒன்றை எழுத இருப்பதாக இசையமைப்பாளர் இளையராஜா அறிவித்துள்ளார்.

லண்டனில் கடந்த மார்ச் 8 ஆம் திகதி 'வேலியன்ட்' என்ற தலைப்பில் பாரம்பரிய சிம்பொனி இசையை அங்குள்ள ஈவென்டிம் அப்போலோ அரங்கில் அரங்கேற்றம் செய்தார் இளையராஜா. உலகின் மிகச் சிறந்த ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழுவுடன் இணைந்து அவர் இதை அரங்கேற்றினார்.

அவரது இசைக் குறிப்புகளை நூற்றுக்கணக்கான கலைஞர்கள் பல்வேறு இசைக் கருவிகளில் ஒரே நேரத்தில் இசைத்தது பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தியது. இதன்மூலம், ஆசிய கண்டத்தில் இருந்து சிம்பொனியை எழுதி, அரங்கேற்றிய முதல் இசையமைப்பாளர் எனும் சாதனையை இளையராஜா படைத்தார். இசை ஜாம்பவான்கள் மொஸார்ட், பீத்தோவன், சாய்கோவ்ஸ்கி ஆகிய சிம்பொனி இசைக் கலைஞர்கள் வரிசையில் இளையராஜாவும் இணைந்தார்.

இந்த நிலையில் தனது புதிய சிம்பொனி இசை குறித்த அறிவிப்பை இளையராஜா வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள காணொலி,

"அனைவருக்கும்தீபாவளிநல்வாழ்த்துகள். இந்த தீபாவளி நாளில் ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறேன். எனது அடுத்த சிம்பொனியை எழுத இருக்கிறேன். அத்துடன் புதிய படைப்பாக சிம்பொனி டான்சர்ஸ் என்ற புதிய இசைக் கோர்வையை எழுத இருக்கிறேன். இதை உங்களுக்கு தீபாவளி நற்செய்தியாக தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



# ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதனை இந்திய நிறுத்தாவிட்டால் கூடுதல் வரி விதிப்பேன்

## ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தாவிட்டால் இந்தியாவுக்குக் கூடுதல் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் பொருள்களை வாங்கும் நாடுகள் மீது அமெரிக்க ஜனாதிபதி கூடுதல் வரிவிதிகளை விதித்து வருகிறார்.

அந்த வகையில், இந்தியா மீது 50 சதவீத கூடுதல் வரியை விதித்தார்.

ஆனால் அவரது மிரட்டல்களை மத்திய அரசு பொருள்படுத்துவது இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய நலன்களைக் கருத்தில் கொண்டு கச்சா எண்ணெய் ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

அது தொடரும் என்று இந்திய மத்திய அரசு ஏற்கனவே திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹொங்கொங்கில் ஓடுபாதையிலிருந்து விலகி கடலுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளான விமானம்







ஹொங்கொங் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையிலிருந்து விலகிச் சென்ற சரக்கு விமானமொன்று கடலுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துருக்கி விமான சேவைக்கு சொந்தமான போயிங் 747-481 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானம், எமிரேட்ஸ் விமான சேவையின் EK9788 என்ற விமானப் பயணமாக டுபாயிலிருந்து வந்துகொண்டிருந்தது.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 03.50 மணியளவில், இது வடக்கு ஓடுபாதையில் தரையிறங்கும்போது, விமான நிலையத்தின் தரைப் பணியாளர்களின் வாகனத்துடன் மோதியுள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையின் படி, விபத்தின் காரணமாக பணியாளர்கள் இருவர் கடலில் வீழ்ந்துள்ளனர்.

அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும், பின்னர் அங்கு உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையின் குறைபாடுகளை நேரில் கேட்டறிந்தார் ரவிகரன்










(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் விஜயமொன்றை மேற்கொண்டு வைத்தியசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறைகள் மற்றும் அண்மையில் இடம்பெற்ற பெண்ணொருவரின் சர்ச்சைக்குரிய மரணம் தொடர்பிலும் நிலைமைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பாலசுப்பிரமணியம் தனஞ்சயன் மற்றும் வைத்தியசாலையின் நலன்புரிச் சங்க நிர்வாகத்தினருடன் ரவிகரன் எம்.பி. நேற்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்..

வைத்தியசாலையில் சிறுநீரக வைத்திய நிபுணர், நுண்ணுயிரியல் மருத்துவர், நரம்பியல் நிபுணர் உள்ளிட்ட வைத்திய நிபுணர்கள் இல்லாத நிலை காணப்படுவதால் தம்மால் வினைத்திறனான வைத்தியசேவைகளைத் வழங்கமுடியாதுள்ளதாக அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

பெண்நோயியல் வைத்திய நிபுணர் மற்றும் குழந்தைநல மருத்துவ நிபுணர் தலா ஒவ்வொருவரே காணப்படுகின்றனர் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக குழந்தைநல மருத்துவ நிபுணராக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் தற்போது பணியாற்றிவருபவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதற்கு பதிலீடாக நியமிக்கப்பட்ட குழந்தைநல மருத்துவர் மகப்பேற்று விடுமுறையில் இருப்பதால் தற்போது கடமையில் ஈடுபட்டிருக்கும் குழந்தை நலமருத்துவரை இதுவரை விடுவிப்புச்செய்யாமல் வைத்திருப்பதாகவும், பதிலீட்டு குழந்தை நல மருத்துவர் கடமைப்பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின்னரே தற்போது கடமையிலுள்ள குழந்தைநல மருத்துவர் இடமாற்றத்திற்கு தம்மால் அனுமதிக்கப்படுவார் எனவும் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

அதேவேளை சட்டவைத்திய அதிகாரியும் தற்போது இல்லாதநிலை காணப்படுவதால் மரணவிசாரணைகள் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனை உள்ளிட்ட விடயங்களைக் கையாள்வதில் பல்வேறு இடர்நிலைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைகாணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் கணிய அச்சுவெட்டு வருடி (CT scanner) இல்லாத நிலைகாணப்படுவதாலும் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருவதாகவும் எடுத்துக்கூறப்பட்டது.

அதேபோல் நீண்டகாலப் பயன்பாட்டில் உள்ள நோயாளர் காவுவண்டிகளே தற்போதும் பயன்பாட்டிலுள்ளமையால் திடீர்பழுதடைதல் உள்ளிட்ட சிக்கல் நிலைகளும் காணப்படுவதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற பெண்ணின் சர்ச்சைக்குரிய மரணம் தொடர்பிலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கேள்விஎழுப்பினார். குறித்த விவகாரம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வைத்திசாலை பிரதிப்பணிப்பாளரால் பதிலளிக்கப்பட்டது. விசாரணைகள் முடிவடைந்தவுடன் விசாரணை அறிக்கை பிரதிகளை தமக்கும் கையளிக்குமாறு இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரால் கோரப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவும் மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறை தொடர்பிலும், நோயாளர் விடுதி பற்றாக்குறை தொடர்பிலும் தம்மால் ஏற்கனவே சுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளமையுடன், அந்தப் பற்றாக்குறைகளை தீர்க்குமாறு சுகாதார அமைச்சரிடம் தாம் வலியுறுத்தியுள்ளார் எனவும் ரவிகரன் தெரிவித்தார்.

அத்தோடு சட்டவைத்திய அதிகாரி இன்மை மற்றும் கணிய அச்சுவெட்டு வருடி (CT scanner) இன்மை தொடர்பிலும் கடந்த ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அதுதொடர்பிலும் தம்மால் தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் ரவிகரன் தெரிவித்தார்.

இதுதவிர மகப்பேற்று வைத்திய நிபுணர் இன்மை காரணமாக மல்லாவி, மாங்குளம், முறிகண்டி ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு மத்தியில் கிளிநொச்சிக்கு நீண்டதூரம் செல்லவேண்டிய நிலையிருப்பது?தொடர்பிலும் தாம் சுகாதார அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார் எனவும், மாங்குளம் மறுவாழ்வு மருத்துவமனையில் மகப்பேற்று சிகிச்சைக்கான சகல வசதிகளிருப்பது குறித்தும், மகப்பேற்று வைத்தியரை மாங்குளம் வைத்தியசாலைக்கும் நியமிக்குமாறும் தாம் சுகாதார அமைச்சரை வலியுறுத்தியுள்ளார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தம்மால் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஆளணி மற்றும் பௌதீக வள பற்றாக்குறைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார்.




# ருஹுணு பல்கலையில் மாணவர்களிடையே நேற்று மோதல்; 6 பேர் காயம்; 20 பேர் கைது

ருஹுணு பல்கலைக்கழகத்தின் வேளாண் பீடத்தில் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு இடையே நேற்று ஏற்பட்ட இதில் ஆறு மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலும் 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் இந்தச் சம்பவம் நடந்ததால், பல்கலைக் கழக அதிகாரிகள் உடனடியாக விரைந்து செயல்பட்டு நிலைமையை சீரமைத்தனர். காயமடைந்த மாணவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரு மாணவர் குழுக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இருந்த. நேற்றைய மோதல் வெடித்ததாக பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் அனைவரையும் உடனடியாக வளாகத்தை விட்டு வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவுறுத்தியது.

மோதலுக்குப் பின்னால் உள்ள முழு சூழ்நிலையையும் கண்டறிந்து பொறுப்பானவர்களை அடையாளம் காண விசாரணைகள் நடந்து வருகின்றன.

# சபை அமர்வுகளை ஒலி, ஒளி வடிவில் ஆவணப்படுத்தி வெளியிட வேண்டும்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதன் வேண்டுகோள்



(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வுகளை ஒலி மற்றும் ஒளி வடிவில் ஆவணப்படுத்தி பின்னர் அதனை மக்கள் பார்வைக்காக வெளியிட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

சபையில் இடம்பெறுகின்ற தகவல்கள் திரிவுபடுத்தப்பட்டு வெளியே கடத்தப்படுகின்றன.

சபையில் இடம்பெறுகின்ற விடயங்களை பொதுமக்கள் அறிய வேண்டும். எனவே சபை அமர்வுகளை முழுமையாக ஆவணப்படுத்தி வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வின் போது சாவகச்சேரி நகர சபையில் சேவையாற்றி தற்போது ஓய்வில் இருக்கும் ஓய்வூதியர்கள், பிரதேசத்தில் சமூக சேவையில் ஈடுபடுபவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். – எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.





# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்ற தீபாவளி பூசை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட இந்து மக்கள் சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து நேற்றைய தினம் திங்கட்கிழமை தீபாவளி பண்டிகையை வெகுவிமர்சியாகவும் பக்திபூர்வமாகக் கொண்டாடினார்கள்.

தீபாவளி விசேட பூசை நேற்றுத் திங்கட்கிழமை காலை மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம் பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்கள் தலைமையில் பூஜைகள் இடம்பெற்றன.

இதன் போது நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இதேவேளை மாவட்டத்தின் பல்வேறு இந்து ஆலயங்களிலும் தீபாவளி விசேட பூஜைகள் இடம் பெற்றன.















# புல்மோட்டை ஊழியர்களில் 83 பேர் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம்




**(ஏ.எச்.ஹஸ்பர்)**

திருகோணமலை புல்மோட்டை கனிய மணல் கூட்டுத் தாபனத்தில் பணியாற்றி வரும் 83 ஊழியர்கள் தமக்கு மாதாந்த சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, தொடர்ச்சியாக நேற்று ஏழாவது நாளாகவும் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 15 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமையால் பெரிதும் பொருளாதார ரீதியாக தங்களது குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தமது பிள்ளைகளின் பாடசாலை கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் உரிய துறை சார் அமைச்சர் அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் கூறுகின்றனர். தங்களுக்கு சாதகமான தீர்வை பெற்றுத் தரக் கோரி அவர்கள் தொடர் சத்தியாக் கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

# 5 வயதுச் சிறுமிக்கு தாயின் கள்ளக் காதலன் அடித்து, உடம்பில் சூடு வைத்துச் சித்திரவதை

## மட்டு. கொக்கட்டிச்சோலையில் சம்பவம்



**(கனகராசா சரவணன்)**

மட்டு. கொக்கட்டிச்சோலையில் 5 வயதுடைய சிறுமி ஒருவரின் தாயாரின் கள்ளக் காதலன் சிறுமிக்கு உடல் முழுக்க சூடு வைத்து, அடித்துச் சித்திரவதை செய்ததில் சிறுமி படுகாயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். சித்திரவதை செய்த கள்ளக் காதலன் தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸெ தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது:-

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த திருமணம் முடித்து 5 வயது குழந்தை ஒன்றுக்கு தாயான 23 வயது பெண் கணவரைப் பிரிந்து வாழ்ந்து வருகிறார்.

இந்த நிலையில் குறித்த சிறுமியின் தாயார் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்குடா பகுதியைச் சேர்ந்த திருமணம் முடித்த ஆண் ஒருவருடன் அறிமுகமாகிப் பழகி வந்துள்ள நிலையில் அவர் அந்தப் பெண்ணுக்கு கொழும்பில் வேலை பெற்றுத்தருவதாக தெரிவித்து அந்தப் பெண்ணுடன் அவரது 5 வயதுக் குழந்தையையும் கொழும்புக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இதனை தொடர்ந்து கொழும்பில் தங்கியிருந்த விடுதிப் பகுதியில் வைத்து அந்த நபர் சிறுமிக்கு சூடு வைத்து, அடித்து சித்திரவதை செய்துள்ளமையை அடுத்து சிறுமியின் வாய் மற்றும் கை ,கால், முதுகு உட்பட உடல் முழுக்க காயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறுமியுடன் தாயார் கொழும்பில் இருந்து மீண்டும் வீட்டுக்கு வந்த பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறுமியை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். கொழும்பில் வைத்து தனக்கு அடித்தனர் என சிறுமி தெரிவித்துள்ளார். சிறுமிக்கு சூடு வைத்து அடித்த நபர் தலைமறைவாகியுள்ளார் எனொ பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மலையகத்திலும் தீபாவளி அனுஷ்டிப்பு

(க.கிஷாந்தன்)

மலையக மக்கள் சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீபாவளி பண்டிகையை நேற்று வெகுவிமரிசையாகவும் பக்திபூர்வமாகவும் கொண்டாடினார்கள்.

ஹட்டன் பகுதியில் ஹட்டன் அருள் மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குருக்கள் சிவஸ்ரீ சற்குண சன்மதுரன் குருக்கள் தலைமையில் தீபாவளி விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன.

விசேட பூஜை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் பொது மக்கள் பங்குபற்றினர். அத்தோடு மலையகத்தில் பல ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்து மக்கள் தங்களது பண்டிகையை புத்தாடைகள் அணிந்து சமய வழிபாடுகளில் ஈடுப்பட்டு, உறவினர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்து, வீடுகளில் சிறப்பாகக் கொண்டாடினர்.













# இன்றைய ராசி பலன்கள் - 21.10.2025




இன்று செய்யும் செயல்கள் யாவற்றிலும் பொறுமை தேவை. உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் எளிதாக அணுகலாம். தெய்வீக பாடல்களை கேட்பதன் மூலம் உங்களுக்கு திருப்தியும் ஆறுதலும் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் புத்திசாலித்தன த்தை பயன்படுத்தி வெற்றி பெறுவீர்கள் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணியாற்றுவது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க மகிழ்ச்சியை தக்க வைக்க விட்டுகொடுத்து செல்ல வேண்டும்.

பண வரவு இன்று திருப்திகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




உங்கள் புத்திசாலித்தனத்தினால் இன்று முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். சுயமாக முன்னேறுவீர்கள். உங்களின் இனிமையான வார்த்தை மூலம் பிறரை திருப்தி படுத்துவீர்கள்.

பணி நிமித்தமான சிறிய பயணம் ஒன்று நேரலாம். இந்தப் பயணம் பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அன்பான உறவுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் வாழ்க்கைத் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று பொறுமை இழக்க வாய்ப்புள்ளதால் அமைதியாகவும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

குறித்த நேரத்தில் பணி முடிப்பது சற்று கடினமாக இருக்கும். கூடுதல் பணிகளை சமாளிக்க கூடுதல் முயற்சி தேவை.

உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க கவனமாக பழக வேண்டும். இதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படும்.

பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு குறைவு. போதிய அளவு சம்பாதித்தாலும் குடும்பத்திற்காக செலவு செய்ய நேரும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம். உங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.




இன்று சுமுகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்களில் தடைகள் ஏற்படும். இதனால் அதிருப்தி உண்டாகும். தேவையற்ற விஷயங்களுக்கு கவலைப்படுவதை தவிர்க்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை தரமாக ஆற்ற இயலாது. இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாகப் பேசுவீர்கள். உங்கள் கவனமற்ற பேச்சுகள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால் வார்த்தைகளில் கவனம் தேவை.

பண வரவு குறைந்து காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் காணப்படும்.

குளிர்ச்சியான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும். சளி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் சில வெறுப்பான சூழ்நிலைகள் உருவாகும். என்றாலும் தெளிவான எண்ணங்களை கொள்ள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் இருக்கலாம்.

பணியிடத்தில் ஏமாற்றமான சூழ்நிலை காணப்படும். பணியில் உங்கள் செயல்திறன் அதிருப்தியை அளிக்கும். பணியிடச் சூழ்நிலை காரணமாக வேறு வேலைக்கு மாற நினைப்பீர்கள்.

உங்கள் குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதிகம்.




இன்று சாதகமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று பொழுதுபோக்கிற்கு உகந்த நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

குறித்த நேரத்திற்குள் வேலையை முடிப்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையார் உங்களுக்கு ஆதரவாக இருப்பார். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களின் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் கையிருப்பு பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும்.

இன்று ஆரோக்கிய பிரச்சினை ஏதும் இருக்காது. இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று உற்சாகமான வாய்ப்புகள் உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்தி திருப்தி காண்பீர்கள்.

உங்கள் முயற்சியில் அர்ப்பணிப்பு காணப்படும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களைப் பகிர்ந்து மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அவருடன் உங்கள் பொன்னான நேரத்தைக் கழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் வீட்டில் நடைபெறும் மங்களகரமான நிகழ்சிக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். நீங்கள் திடமாகவும் வலிமையுடனும் காணப்படுவீர்கள்.




உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்களின் இலட்சியத்தை அடையலாம்.

அதிகமான பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். சரியாக திட்டமிட்டால் இந்த சவால்களை சமாளிக்கலாம்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் காணப்படும். இதனை தவிர்த்தல் வேண்டும்.மகிழ்ச்சியாக இருக்க இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வை வளர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பண இழப்பும் காணப்படுகின்றது. பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.10.2025




இன்று திறமையாக செயலாற்ற முடியாது. சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப் புள்ளது. கவனமாப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழக வேண்டும். இன்று வேறுபாடுகளைக் களைந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நாள்.

இன்று குடும்பச் செலவுகள் அதிகமாக காணப்படும். பணத்தை சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும். செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

உங்கள் தாய்க்கு வயிறு சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். அவரின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று சாதகமான நாள். அனைத் தும் எளிதாகவும் சுமுகமாகவும் நடை பெறும். உங்களின் உறுதியான மற்றும் நேர்மறை அணுகுமுறை காரணமாக வெற்றி காண்பீர்கள்.

உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக் கும். பணியில் உங்கள் திறமை மற்றும் ஆற்றலை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக பழக வேண்டும். இதனால் உங்கள் பிரியமனவரிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று வளர்ச்சி காணப்படும். வாழ் வின் யதார்த்தத்தை புரிந்து கொள் வீர்கள்.புதிய அனுபவங்கள் மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் பணி யில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தை களில் பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இது உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

நீங்கள் இன்று அமைதியாக இருக்க வேண்டும்.




இன்று மந்தமான நடவடிக்கைகள் காணப்படும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க உங்கள் உணர்ச்சிகளை கட்டுப் பாட்டில் வைக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் செயல்களை திறம்பட ஆற்ற இயலாது. சக பணியாளர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெற இயலாது.

இன்று உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப் படுத்த இயலாது. உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பண வரவு திருப்திகரமாக இருக்காது. பணவரவு காணப்பட்டாலும் தேவையற்ற விஷயங்களுக்காக பண விரயம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

# போதைப் பொருளுடன் தீபாவளியன்று இருவர் கைது



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புற நகர் பகுதி யில் ஐஸ் போதைப் பொருளை தம் வசம் வைத்திருந்த இரு சந்தேக நபர்களை தீபாவளித் தினமான நேற்றுத் திங்கட் கிழமை மாலை சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினர் கைது செய்தனர்.

இரகசிய தகவலின் அடிப்படை யில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்கள் 25 வயது மற்றும் 22 வயதுடையவர்கள் என்ப துடன் சம்மாந்துறை மலையடிக்கிரா மம் 3 பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

அவர்களிடம் இருந்து 1370 மில்லி கிராம், 385 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன் ஒரு தொகை பணம், மூன்று கையடக்கத் தொலை பேசிகள், மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டன. அவற்றுடன் சந்தேக நபர்கள் இருவரும் சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை சம்மாந்தறை நீதிவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.